# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.140/2021

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 29–01–2026.

பெயர் = ராஜேஸ்வரி வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி.–

(1) தாவாச்சொத்து காலிமனையாக உள்ளது என்றால் சரிதான். நத்தம் சர்வே காலிமனைக்கு பட்டா தரமாட்டார்கள் வீடு இருந்தால் தான் தருவார்கள் என்றால் சரியல்ல எனக்கு பட்டா கொடுத்துள்ளார்கள். என் கணவர் தாவாச்சொத்து உள்ள கிராமத்தில் தலையாரி என்றால் சரிதான். என் கணவரின் ஏற்பாட்டின்பெயரில்தான் பட்டா வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பின் தான் பட்டா வாங்கினேன் என்றால் கிரையம் வாங்கும்போதே பட்டா இருந்தது என சாட்சி கூறுகிறார். தாவா இடத்திற்கு வடக்கே செல்லத்துரை இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கே மாசிலாமணி இடம் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு தெற்கே கிழமேல் வண்டிப்பாதை உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கே சூடாமணி காலிமனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி நான்குமால்களுக்குள் கிழமேல் 12 கெஜம், தென்வடல் 12.1/2 கெஜம் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு மேற்படி அளவு தெரியாது 1.1/2 செண்ட் கிரையம் வாங்கியுள்ளேன் என சாட்சி கூறுகிறார். பூமியில் தற்போது இடம் கிழமேல் 12 கெஜம், தென்வடல் 12.1/2 கெஜம்தான் இருக்கிறது என்றால் சரிதான். தாவாச்சொத்தின் பழைய சர்வே எண்.639 என்றால் சரிதான். 1991ல் தான் நத்தம் சர்வே நடந்தது என்றால் எனக்குத் தெரியாது.

(2) காசிராஜன் இருக்கிறாரா என்றால் ஆமாம். காசிராஜனின் அம்மா பெயர் அழகம்மாளா என்றால் எனக்குத் தெரியாது. அவரது அப்பா பெயரும் தெரியாது. காசிராஜன் ஊரில் உள்ளார் அவரது அம்மா, அப்பா இருவரும் உயிருடன் இல்லை. எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்த காசிராஜன் உடையாரின் பேரனா என எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் உடையாரின் பேரன் காசிராஜனிடம் இருந்து எழுதிவாங்கியுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி விவரத்தை என் பதில் வழக்குரையில் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். தாவாச்சொத்து காசிராஜனிற்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்குத் தெரியாது. காசிராஜனிடம் கிரையம் வாங்கும்போது முன்பத்திரங்கள் எதுவும் பார்த்தேனா என்றால் பட்டா வைத்திருந்தார் பார்த்தோம் என சாட்சி கூறுகிறார். காசிராஜனின் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.639/6 ல் உள்ள இடத்தை நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல தாவாச்சொத்திற்கு வடக்கே உள்ள இடத்தை தர்மராஜ் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளேன் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே வடக்கே உள்ள சொத்தை கிரையம் வாங்கிவிட்டேன். அந்த கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அந்த கிரையப்பத்திரத்தில் தெற்கு நான்குமாலில் தாவா இடத்தை காண்பித்துள்ளார்களா என்றால் ஆமாம் காசிராஜனின் பெயரில் இருப்பதாக சாட்சி கூறுகிறார். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய அறிவிப்பு கொடுத்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என சாட்சி கூறுகிறார். தர்மராஜ் என்பவர் காசிராஜனின் ஒரு பங்காளி ஆவார்.

(3) தர்மராஜனின் தந்தை பெயர் செல்லத்துரை. பிரதிவாதி கிரையம் வாங்கியது வேறு தர்மராஜிடம் இருந்து என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தில் வேப்பமரம், புங்கமரம் உள்ளது என்றால் சரிதான் 100 நாள் வேலைக்காரர்கள் வைத்துள்ளார்கள் என சாட்சி கூறுகிறார். பிராதில் மேற்படி விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் தாவாச்சொத்தில் புங்கமரம், வேப்பமரம் உள்ளதாக சொல்லியுள்ளார்கள். தாவாச்சொத்தில் தற்போது பிரதிவாதி மாடு கட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு கிழக்கே தான் மாடுகட்டியுள்ளார் அந்த இடம் மாசிலாமணி வகையறா இடம் என சாட்சி கூறுகிறார். நான் சொல்வது பொய் தாவா சொத்தில்தான் பிரதிவாதி மாடு கட்டுகிறார் என்றால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்த காசிராஜனுக்கு பட்டாவை தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. அந்த பட்டா மோசடியானது என் கணவர் தலையாரி என்பதால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காசிராஜனின் உடன்பிறந்தவர்கள் 3 பேர். ரஜினிபாண்டி, சன்னாசி ஆகியோர் ஆவார்கள். காசிராஜனுக்கு உடன்பிறந்த சகோதரி இருக்கிறார் அவருக்கு திருமணம் செய்துகொடுத்துவிட்டார்கள் அவர் பெயர் கடலைவெள்ளையம்மாள். காசிராஜனின் உடன்பிறந்த சகோதரர்களுடன் பாகம் நடந்ததா என எனக்குத் தெரியாது. எனக்கு

எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தில் பாகம் ஏற்பட்டு அதில் காசிராஜனுக்கு கிடைத்ததா என சொல்லியுள்ளதா என்றால் இல்லை.

(4) தாவாச்சொத்தில் காசிராஜனுக்கு பாத்தியமில்லை அவருக்கு அதனை எழுதிக்கொடுக்க உரிமையில்லை என்றால் சரியல்ல. செல்லையா மகள் லெட்சுமியம்மாள் என்பவரை எனக்குத் தெரியாது. கோபால் மகன் உடையார் இறந்துவிட்டாரா என எனக்குத் தெரியாது. தாவாச்சொத்து உடையாருக்கு பாத்தியமாக இருந்து 1978 ல் லெட்சுமியம்மாளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. லெட்சுமியம்மாளின் மகன் தர்மராஜ் பிரதிவாதிக்கு 2003 ல் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2003 ல் பத்திரம் எழுதுவதற்கு நான்குமால், சர்வே எண்ணை தலையாரி என்ற முறையில் என் கணவரிடம் கேட்டார்கள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அப்போது என் கணவர் தவறான நான்குமாலை சர்வே எண்ணையும் சொல்லிவிட்டார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. அதனால் பிரதிவாதி கிரையப்பத்திரத்தில் தவறான் நான்குமாலையும், சர்வே எண்ணையும் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. லெட்சுமியம்மாளின் கிரையச்சொத்தை கிரையம் பெற்றுவிட்டு தற்போதுவரை பிரதிவாதி அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்குவதற்கு வில்லங்கம் போட்டுபார்த்தேனா என்றால் எனக்குத் தெரியாது. நான் வில்லங்கம் போட்டு பார்த்திருந்தால் 1978 ம் வருட பதிவு தெரிந்திருக்கும் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவாச்சொத்தில் எனக்கு பாத்தியமும், அனுபவமும் இல்லை பிரதிவாதி வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய பத்திரம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால்சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2026.01.29 17:41:15 +0530